[27th January 1970

திரு. கே. அறிவழகன் : இதில் குறிப்பிடப்பட்டிருக்கிற மாதவரம், சித்தலப்பாக்கம், பல்லாவரம் ஆகிய இடங்களுக்கு அருகில் உள்ள வேளச்சேரியில் எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியில் பணியாற்றுகிற ஆசிரியர்கள் இன்னும் நகர ஈட்டுப்படி பெருமல் இருக்கிருர்கள். நகர ஈட்டுப்படி கோரி அவர்களும் அதற்கான விண்ணப்பம் கொடுத்திருக்கிருர்கள். அதைப்பற்றி அரசு முடிவு செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர் நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சென்னையைச் சுற்றியுள்ள செயிண்ட் தாமஸ் மவுண்ட், பல்லாவரம், தாம்பரம், ஆவடி, அம்பத்தூர், வில்லிவாக்கம், திருவான்மியூர், சித்தலப் பாக்கம் ஆகிய இடங்களில் இருப்பவர்களுக்கு நகர ஈட்டுப்படி வழங்கப் படுகிறது. வேளச்சேரியில் குடியிருக்கும் ஆசியர்களிடமிருந்து விண்ணப் பம் வந்திருக்கிறது. அது முறைப்படி ஆராயப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

Tuberculosis Hospital Building at Sengipatti.

* 62 *Q*.—Thiru M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) the number of persons who died as a result of the collapse of the building of Tuberculosis Hospital at Sengipatti, Thanjavur district, on 11th May 1969 ;

(*b*) the number of persons injured ; and

(c) the reasons for the collapse of the building ?

செங்கிப்பட்டி காசநோய் மருத்துவமனைக் கட்டிடம்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன். :

(அ) 11–5–1969 அன்று தஞ்சாவூர் மாவட்ட செங்கிப்பட்டி காச நோய் மருத்துவ மனையில் கட்டிடம் இடிந்து விழுந்ததினுல் இறந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) காயம் அடைந்தவர்கள் எத்தனை பேர் ?

(உ) கட்டிடம் இடிந்து விழுந்ததற்கு காரணம் யாது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஒருவர்.

(இ) ஐந்து பேர்.

(உ) புயல் காற்றின் விளைவாக.

திரு. டி. கே. சுப்பையா : தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடம் நன்கொடையாகக் கட்டிக் கொடுக்கப்பட்ட கட்டிடமா ? அந்த மருத்துவ மனைக் கட்டிடத்தை அல்லது அது போன்று கட்டிக் கொடுக்கும் கட்டிடங் களைப் பராமரிப்பது அரசாங்கமா அல்லது வேறு ஏதாவது டிரஸ்ட் போர்டா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அந்தக் கட்டிடம் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் இருக்கிற ஒரு குழுவின் சார்பாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இரண்டு கட்டிடங்களும் கூரைக் கட்டிடங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அது அரசாங்கத்தால் கட்டப்பட் டதா, அல்லது தனியாரால் கட்டப்பட்டதா என்ற விவரம் இங்கே இல்லை. ஆனல் இந்த இரண்டு கட்டிடங்களையும் புதுப்பிக்க வேண்டும் என்று விண்ணப்பம் வந்திருக்கிறது. அதாவது, இந்த இரண்டு கட்டிடங்களையும் புதுப்பிப்பதற்கு மொத்தம் ரூ. 1,53,500 ஒதுக்க வேண்டும் என்ற விண் ணப்பத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுப்பி வைத்திருக்கிருர்

27th January 1970]

கள். ஆனால் அதில் ஒரு கட்டிடத்தையாவது ரூபாய் 76,500 செலவில் நிலையான கட்டிடமாகக் கட்டித் தரவேண்டும் என்ற பரிந்துரையை இயக்குநர் அவர்கள் அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருந்து வருகிறது. அதைப் பற்றி விரைவில் ஒரு முடிவு எடுக்கப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, சில ஆண்டுகளுக்கு முன்னால் இந்தச் சட்டசபையில் "பில்டிங் லைசென்சிங் ஆக்ட்" என்ற ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அது அமுல் படுத்தப்பட்டிருந்தால், இது போன்ற நிலைமைகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம். அந்த "ஆக்ட்" அமுல் படுத்தப்படவில்லையா ? எல்லோரும் அப்படிப்பட்ட வகையில் லைசென்ஸ் பெறுகிறார்களா ? இல்லாவிட்டால், இனிமேலாவது அரசாங்கம் அதை அமுல் படுத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றி ஆராயப்பட்டு அண்மையில் தான் இது பற்றி உத்திர விடுவதற்கான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இனி அந்தச் சட்டப்படி பொதுக் கட்டிடங்களை ஆராய்ந்து லைசென்ஸ் வழங்கும் முறை அமுலுக்கு வரும்.

திரு. வி. தங்கபாண்டியன் : இந்த மருத்துவ மனைக் கட்டிடம் மோசமான நிலைமையில் இருக்கிறது என்பதை அந்த மருத்துவ மனையின் அதிகாரி அரசாங்கத்திற்கு முன் கூட்டியே தெரிவித்திருக்கிறாரா ? அப்படி தெரிவிக்க வில்லை என்றால், அந்த மருத்துவ மனை அதிகாரி மீது இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சாதாரணமாக உள்ள நிலையில் அந்தக் கட்டிடங்கள் தக்கபடிதான் இருந்தன. ஆனால் எதிர்பாராத வகையில் அடித்த புயல் காரணமாக, பெரிய பெரிய மாடிக்கட்டிடங்கள் எல்லாம் "ஆடிக் காற்றில் அம்மியே பறக்கும் போது இலவம் பஞ்சின் கதி என்ன" என்பதற்கு இணங்க சேதமடைந்த போது, இந்த கூரை கட்டிடங்களும் பாதிக்கப்பட்டன. சாதாரண சூழ் நிலையில் அந்தக் கட்டிடங்கள் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருப்பதாக அதிகாரிகளால் கருதப்படவில்லை. ஆனால் எதிர்பாராத புயல் காரணமாகத்தான் இந்த விபத்து ஏற்பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன் : செங்கிப்பட்டியில் உள்ள காசநோய் மருத்துவமனையை பொறுத்த மட்டில், பெரும்பாலும் வரவேண்டிய பணம் பூராவும் நிலங்களிலிருந்து குத்தகைக்காரர்கள் கொடுத்துத்தான் வர வேண்டிய நிலை இருக்கிறது. ஆனால் மாரடோரியம் வந்த பிறகு, செங்கிப்பட்டி காச நோய் மருத்துவ மனைக்கு வர வேண்டிய பணம் எதுவும் வராமல், அங்கே உள்ள நோயாளிகளுக்கு மருந்துகூட வாங்கிக் கொடுக்க முடியாத சூழ்நிலையும், அங்குள்ள கட்டிடங்கள் எல்லாம் பழுது பார்க்கக்கூட முடியாத நிலையும் இருந்து வருகின்றன. எனவே இந்த மருத்துவமனை சரிவர நடைபெறும் வகையில், அதன் பொருளாதார நிலையை மேம்படுத்த அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இப்போது மாரடோரியம் நிறுத்தப்படுவதற்கான வழி வகை கண்டிருப்பதால், வரவேண்டிய பாக்கிகள் எல்லாம் அந்த மருத்துவ மனைக்கு வரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அதற்கு இடையில் இந்தக் கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டும் என்று அவர்கள் புரோபோசல்ஸ் அனுப்பியிருக்கிறார்கள். தற்போது ஒரு கட்டிடத்தையாவது கட்டித் தர வேண்டும் என்று இயக்குநர் அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் இதுபற்றி முடிவு எடுக்கப்படும்.